Dean, Medical College.

* 6 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that there is no proper co-ordination between the Thanjavur Medical College and the two hospitals attached to the same for want of a Dean; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

மருத்துவக் கல்லூரித் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரித் தலைவர் ஒருவர் இல்லாத காரணத்தால், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியும், அதனேடு இணைந்துள்ள மருத்துவ மனைகள் இரண்டும் இணைந்து செயல்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மருத்துவக் கல்லூரியில் இருக்கிற மாணவர்கள் 'கிளினிகல்' என்று சொல்லப்படுகிற நோயாளிகளைப் பார்ப்பதற்காக ராஜா மிராசுதார் மருத்துவ மனைக்கு வர வேண்டியதாக இருக்கிறது. காரணம் சாதாரணமாக முற்றிய நிலையிலுள்ள ஏழை நோயாளிகள் அங்கிருக்கிருர்கள். அப்படி வருகிறவர்களுக்குச் சரியான முறையில் பாடம் சொல்லிக்கொடுக்கக்கூடிய நிலையில்லை என்று மாணவர்கள் சொல்கிருர்கள். 'டீன்' இல்லாத காரணத்தால், அங்கு இருக்கிற பேராசிரி யர்கள் சரியாகச் சொல்லிக்கொடுக்கக்கூடிய நிலையில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர் களுக்கு கல்லூரியில் 'டீன்' இல்லாத காரணத்தால், அந்தக் குறை இருப்ப தாகத் தெரிகிறது. எனக்கு 'டீன்' இருக்கிற இடத்தில் ஏற்படுகிற குறை தெரிகிறது. 'டீன்' இருப்பது மட்டுமல்ல. முறையைப் போக்குவது

1973 பிப்ரவரி 5]

ஆசிரியர்களுடைய கடமை உணர்ச்சியைப் பொறுத்தது. அதுபோல மாண வர்கள் இன்னொரு மருத்துவ மனைக்குச் சென்று நோயாளிகளைக் காண்பது, பயிற்சி பெறுவது இன்றைக்கும் சென்னையிலே கையாளப்படுகிற முறை. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலிருந்து, ராயப்பேட்டை மருத்துவ மனைக்குச் சென்று பயிற்சி பெற்றாக வேண்டும். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாண வர்கள் அதற்குப் பக்கத்திலுள்ள ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவ மனையில் பயிற்சி பெற்றாக வேண்டும். அப்படி வெவ்வேறு மருத்துவ மனைகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தால், அவ்வாறு பயிற்சிக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அது தவறல்ல. பொது வாக மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் ஒருவிதமான கடமை உணர்ச்சி ஏற்படுமேயானால், எந்தவிதச் சூழ்நிலையிலும் பயிற்சி பெறுவார்கள்.

Panchayat School Buildings.

*1 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the names of the Panchayats in this State which do not own school buildings; and

(b) the steps taken to have such buildings?

ஊராட்சிகளுக்கு பள்ளிக் கட்டிடங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சொந்தக் கட்டிடங்கள் இல்லாத பள்ளிக் கட்டி டங்கள் உள்ள ஊராட்சிகளின் பெயர்கள் யாவை?

(இ) அத்தகைய ஊராட்சிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட எடுத் துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி தொடக்கக் கல்வியின் சிறு பள்ளிகளை நடத்தும் பொறுப்பும் அவற்றைப் பேணி வரும் பொறுப்பும் ஊராட்சி ஒன்றி யங்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளதே தவிர ஊராட்சிகளிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்காக முனைப்புத் திட்டத்தை செயல்படுத்த ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கடன் உதவி பெறுதற்காக